**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| திருமதி.ரா.ஜெகதீஸ்வரி, | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், |
| ஆணையாளர், | திருநெல்வேலி - 2. |
| சாத்தூர் நகராட்சி, | |
| சாத்தூர் - 626203. | |
| விருதுநகர் மாவட்டம். | |

**ந.க.எண்.1481/2016/சி2, நாள்: 05.09.2023**

அம்மா,

பொருள்: நகர்மன்றக்கூட்டம் - சாத்தூர் நகராட்சி - 31.07.2023ம் தேதியன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அனுப்பி வைத்தல் - சம்மந்தமாக.

-------

சாத்தூர் நகர்மன்றக் கூட்டத்தில் 31.07.2023ம் தேதியன்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் கூட்ட நடவடிக்கையின் விபர அறிக்கை மற்றும் தீர்மான நகல் இத்துடன் இணைத்து பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

| வ.எண் | நகராட்சியின் பெயர் | கூட்ட நடவடிக்கையின் விபரம் |
|---|---|---|
| 1 | சாத்தூர் | தீர்மானம் எண்.1 முதல் 25 வரை, நாள்: 31.07.2023 (சாதாரணக் கூட்டத்திற்கான 25 பொருள்கள் மட்டும்), |

ஆணையாளர்,
சாத்தூர் நகராட்சி,

<u>இணைப்பு:</u>
சாதாரணக் கூட்ட தீர்மான நகல்

<u>நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28.
2. மாவட்ட ஆட்சியர், விருதுநகர்.

நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 27.07.2023
---------------------------------------

## சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக் கூட்டம் அறிவிப்பு

கூட்டம் எண். 17

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் ஆடி 15 ஆம் நாள் 2023ம் ஆண்டு ஜூலை மாதம் 31.07.2023ம் தேதியன்று திங்கள்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர்மன்றத் தலைவர்
சாத்தூர் நகராட்சி.

பொருள் எண்.1

## சாத்தூர் நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் நன்றியுரை தீர்மானம்

தமிழக உள்ளாட்சி அமைப்புகளில் தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் முழுநேர மக்கள் பணியில் ஈடுபடும் பொருட்டு நகர்மன்றத் தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மதிப்பூதியமாக மாதந்தோறும் நகர்மன்றத் தலைவருக்கு ரூ.15,000/-மும், துணைத்தலைவருக்கு ரூ.10,000/-மும் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு ரூ.5,000/-மும் வழங்கிட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண்.98, நாள். 13.07.2023 அரசாணை பிறப்பித்து இந்தியாவிலேயே முன்மாதிரி மாநிலமாக மாற்றிய தமிழக முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்நகர்மன்றத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.295, நாள்: 31.07.2023**

**தீர்மானம்:** தமிழக முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்நகர்மன்றத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்து தீர்மானிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.2</u>**

இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி நிலுவைத் தொகையினை செலுத்தக்கோரி திருமதி.பா.லலிதா, 12/1ஏ, தில்லை நகர் என்பவரை எதிர்மனுதாரராக சேர்த்து சாத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.I.A.No.1/2023, O.S.No.14/2023-ற்கு இந்நகராட்சி சார்பாக திரு.V.பாலமுருகன், வழக்கறிஞர் ஆஜராகவும், வழக்கிற்கான செலவுத் தொகை மற்றும் நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நாளிதழில் விளம்பரம் செய்வதமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.17/2023/அ1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.296, நாள்: 31.07.2023**

**தீர்மானம்: அலுவலக குறிப்பிற்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.3</u>**

இந்நகராட்சியில் டேங்க் கிளீனராகப் பணியாற்றி 30.06.2015ல் ஓய்வுபெற்று காலஞ்சென்ற திரு.ஜி.மகாலிங்கம் என்பவரின் மனைவி திருமதி.சந்திராதேவி என்பவரால் ஓய்வூதிய பணப்பயன்கள் வழங்கக்கோரி சென்னை உயர்நீதிமன்றக் கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP (MD) No.16530/2023ன் வழக்கிற்கு ஆஜராகிய வழக்கறிஞர் திரு.வி.ஓம்பிரகாஷ் என்பவருக்கு வழக்கு கட்டணமாக ரூ.9,500/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.757/2015/சி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.297, நாள்: 31.07.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.4</u>**

இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி நிலுவைத் தொகைக்காக ஆக்ஸ்போர்டு மெட்ரிக்குலேசன் பள்ளி தாளாளர் திரு.கே.விஜயராஜ் அவர்களால் சென்னை உயர்நீதிமன்றக் கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.6345/2023ன் வழக்கிற்கு ஆஜராகிய வழக்கறிஞர் திரு.எம்.கண்ணன் என்பவருக்கு வழக்கு கட்டணமாக ரூ.15,000/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.17/2023/அ1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.298, நாள்: 31.07.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.5</u>**

இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி நிலுவைத் தொகைக்காக ஆக்ஸ்போர்டு மெட்ரிக்குலேசன் பள்ளி தாளாளர் திரு.கே.விஜயராஜ் அவர்களால் சென்னை உயர்நீதிமன்றக் கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.7230/2023ன் வழக்கிற்கு ஆஜராகிய வழக்கறிஞர் திரு.எம்.கண்ணன் என்பவருக்கு வழக்கு கட்டணமாக ரூ.15,000/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.17/2023/அ1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.299, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.6</u>**

இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி நிலுவைத் தொகைக்காக ஆக்ஸ்போர்டு மெட்ரிக்குலேசன் பள்ளி தாளாளர் திரு.கே.விஜயராஜ் அவர்களால் சென்னை உயர்நீதிமன்றக் கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.23700/2018ன் வழக்கிற்கு ஆஜராகிய வழக்கறிஞர் திரு.எம்.கண்ணன் என்பவருக்கு வழக்கு கட்டணமாக ரூ.15,000/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.17/2023/அ1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.300, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.7</u>**

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்:13.07.2023ல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்க ஆணையிடப்பட்டது. அதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | மதிப்பூதியம் ரூ. |
|---|---|---|
| 1 | நகர்மன்றத் தலைவர் | 15000 |
| 2 | நகர்மன்றத் துணைத்தலைவர் | 10000 |
| 3 | நகர்மன்ற உறுப்பினர்கள் | 5000 |

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.575/2023/சி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.301, நாள்: 31.07.2023**

**தீர்மானம்: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண்.8</u>**

சாத்தூர் நகராட்சிக்கு சீவலப்பேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் விநியோகம் செய்யப்படும் குடிநீர் அளவு மிகவும் குறைந்த அளவிலே வழங்கப்படுகிறது. மேலும் மின்தடை குடிநீர் குழாய் உடைப்புகள் மற்றும் பராமரிப்பு பணிகளால் மிக மிக குறைந்த அளவிலே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வழங்கப்படுவதால் போதுமான அளவில் பொதுமக்களுக்கு வழங்க இயலவில்லை. இதனால் பொதுமக்களிடம் கடும் அதிருப்தி ஏற்படுகிறது. எனவே உள்ளூர் குடிநீர் ஆதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு படந்தால் ஊராட்சிக்கு சொந்தமான குடிநீர் உறைகிணற்றினை பயன்படுத்தும் பொருட்டு தற்காலிகமாக ஆயில் இன்ஜின் வைத்து குடிநீரினை எடுப்பதற்கும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.40,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று அவசரகால ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதித்து அங்கிகரீக்கலாம்.

(ந.க.எண்.538/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.302, நாள்: 31.07.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.9</u>**

சாத்தூர் நகராட்சிக்கு இருக்கண்குடி நீர் உந்து நிலையத்தில் உள்ளூர் குடிநீர் ஆதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு 8” ஆழ்துளை கிணறு புதியதாக அமைக்கவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.4,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று அவசரகால ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதித்து அங்கிகரீக்கலாம்.

(ந.க.எண்.537/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.303, நாள்: 31.07.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

சாத்தூர் நகராட்சி மெயின் அலுவலகத்தில் இரண்டாம் தளத்தில் உள்ள மன்ற கூட்ட அரங்கினை தரை தளத்திற்கு மாற்றி அமைப்பதற்கு இருக்கை வசதிகள், மின்வசதிகள் மற்றும் Stand Fan ஆகிய பணிகளை மேற்கொள்ளுவதற்கு 09.06.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. டி.சுந்தரமகாலிங்கம் - ரூ.69,762/-
2. பி.சுப்பாராஜ் - ரூ.72,332/-

அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட பணியினை ரூ.70,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.271 நாள்:25.05.2023-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள டி.சுந்தரமகாலிங்கம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.418/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.304, நாள்: 31.07.2023**

**தீர்மானம்: அலுவலக குறிப்பிற்கு மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

சாத்தூர் நகராட்சிக்கு சீவலப்பேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் விநியோகம் செய்யப்படும் குடிநீர் அளவு மிகவும் குறைந்த அளவிலே வழங்கப்படுகிறது. எனவே உள்ளூர் குடிநீர் ஆதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு படந்தால் ஊராட்சிக்கு சொந்தமான குடிநீர் உறைகிணற்றினை பயன்படுத்தும் பொருட்டு தற்காலிகமாக ஆயில் இன்ஜின் வைத்து குடிநீரினை எடுக்கும் பணிகளை மேற்கொள்ளுவதற்கு 07.07.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. டி.சுந்தரமகாலிங்கம் - 1 மணி நேரத்திற்கு ரூ600/-வீதம்

2. பி.சுப்பாராஜ் - 1 மணி நேரத்திற்கு ரூ.700/ வீதம்

<u>அலுவலக குறிப்பு</u>:

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள டி.சுந்தரமகாலிங்கம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று மன்றத்தின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.538/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.305, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.12</u>**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட மேலக்காந்தி நகரில் உள்ள சிறுபாலம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. புதியதாக சிறுபாலம் அமைக்க தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,78,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.557/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.306, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.13</u>**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட காட்டு நாயக்கர் தெருவில் உள்ள சிறுபாலம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. புதியதாக சிறுபாலம் அமைக்க தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,30,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.558/2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.307, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.14</u>**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட ராஜ கோபால் மண்டபம் ரேசன் கடை அருகில் உள்ள சிறுபாலம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. புதியதாக சிறுபாலம் அமைக்க தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,51,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.559/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.308, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட மேலக்காந்தி நகர் பண்கார தெருவில் உள்ள சிறுபாலம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. புதியதாக சிறுபாலம் அமைக்க தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,30,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.560/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.309, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட மேலக்காந்தி நகர் குறுக்கு தெருவில் உள்ள சிறுபாலம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. புதியதாக சிறுபாலம் அமைக்க தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2,89,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.561/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.310, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட ராஜ கோபால் மண்டபம் குறுக்கு தெருவில் உள்ள சிறுபாலம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. புதியதாக சிறுபாலம் அமைக்க தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.60,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.562/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.311, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.18**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட மேலக்காந்தி நகர் கடைசி தெருவில் உள்ள சிறுபாலம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. புதியதாக சிறுபாலம் அமைக்க தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,61,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.563/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.312, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.19**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பெருமாள் கோவில் தெற்கு ரத வீதியில் உள்ள சமுதாய கூடம் பழுதடைந்துள்ளது. அதில் மராமத்து பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.566/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.313, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.20**

சாத்தூர் நகராட்சி அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோவில் தேர் திருவிழாவினை முன்னிட்டு ரத வீதிகளில் சாலைகளை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளுமாறு வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் 14.06.2023-ம் தேதிய கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ளுவதற்கு போதிய கால அவகாசம் இல்லாததால் நகராட்சியில் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர் திரு.டி.சுந்தரமகாலிங்கம் அவர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,35,000/-கான விலைவிகித்திலேயே மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி போதிய கால அவகாசம் இல்லாததால் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.டி.சுந்தரமகாலிங்கம் பணியினை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கிகரீக்கலாம்.
(ந.க.எண்.565/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.314, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.21</u>**

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் விநியோக பெரிய டேங்கர் லாரி TN 67 A 7796 வாகனம் வாங்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேலாகிறது. மேலும் இவ்வண்டிக்கான தகுதி சான்று செப்டம்பர் 2023 உடன் முடிவு பெறுகிறது. தமிழ்நாடு மோட்டார் வாகன அரசாணையில் 275 நாள்: 10.10.1990-ல் எந்த ஒரு அரசு வாகனமும் அதிகபட்சமாக 2,50,000 கி.மீ இயக்கப்பட்டிருந்தாலோ அல்லது 10 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு இருந்தால் மேற்கண்ட வாகனத்தினை கழிவு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட வாகனம் 25 ஆண்டுகளுக்கு மேலாவதால் வாகனத்தினை புதுப்பித்து இயக்க இயலாது. மேலும் குடிநீர் பணியின் அத்தியாவசியம் கருதி புதியதாக ஒரு டேங்கர் லாரி வாங்கவும் அதற்கான கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) இந்நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கென ஒரு பெரிய டேங்கர் லாரி மற்றும் ஒரு சிறிய டேங்கர் லாரி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்போது 2 லாரிகளுக்கும் அதன் ஆயுட்காலம் முடிவு பெறுவதால் அதனை கழிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) வறட்சி காலங்கள் மற்றும் திருவிழா காலங்களில் பொதுமக்களின் தேவைக்கு இதுநாள் வரை இரு லாரிகளை கொண்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது இரண்டு லாரிகளையும் கழிவு செய்வதால் அவசர காலத்திற்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு இந்நகராட்சியில் வாகனங்கள் எதுவும் இல்லை. எனவே குடிநீர் பணியின் அத்தியாவசியம் கருதி ஒரு டேங்கர் லாரி வாங்கவும் அதற்கு ஏதேனும் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து தரக்கோரி உரிய கருத்துருவினை சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.567/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.315, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: அலுவலக குறிப்பிற்கு மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.22</u>**

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஜெட்ராய்டு வாகனம் TN 67 BJ 4441 வண்டிக்கு பேட்டரி முற்றிலும் செயல் இழந்து விட்டதால் புதியதாக பேட்டரி சப்ளை செய்யும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 21.07.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. நியூ ஜார்ஜ் ஆட்டோ எலக்ட்ரிக்ல்ஸ் - ரூ.6000/-
2. சாந்தா ஸ்பேர் & சர்வீஸ் - ரூ.6227/-
3. ஸ்ரீசெண்பக விநாயகர் டிரேடர்ஸ் - ரூ.6400/-

அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட பணியினை ரூ.6,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.284 நாள்:27.06.2023-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள நியூ ஜார்ஜ் ஆட்டோ எலக்ட்ரிக்ல்ஸ் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.464/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.316, நாள்: 31.07.2023**

**தீர்மானம்: மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.23**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஜெட்ராய்டு வாகனம் TN 67BE 5382 இன்ஜின் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் பாதாள சாக்கடை அடைப்பு நீக்கம் செய்ய மிகவும் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட வாகனத்தினை சப்ளை செய்த சாமுண்டீஸ்வரி நிறுவனத்தின் மூலம் பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் செலவு தொகை ரூ.87,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி வாகனத்தினை சப்ளை செய்த சாமுண்டீஸ்வரி நிறுவனத்தின் மூலம் பழுது பார்க்கும் பணியினை மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கிகரீக்கலாம்.

(ந.க.எண்.569/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.317, நாள்: 31.07.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.24**

இந்நகராட்சிக்கு சொந்தமான பெரிய ஜெட்ராய்டு வாகனம் TN 67BK 1057 தண்ணீர் ஓஸ் ஜெட்டிங் ஜாயின்ட் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே புதியது மாட்டவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.12,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.570/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.318, நாள்: 31.07.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.25**

இந்நகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்காக Animal Birth Control இந்நகர்மன்றத் தீர்மான எண்.44, நாள்: 20.05.2022ல் அனுமதிக்கப்பட்டபடி, ஜீவகாருண்யா விலங்கு நல சாரிட்டபிள் டிரஸ்ட் நாகர்கோவில் நிறுவனத்திற்கு 21.06.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் மருத்துவர் மற்றும் நாய் பிடிக்கும் குழுவினர் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளில் தெரு நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை பணியை மேற்கொண்டிருந்ததால் அந்த சமயத்தில் தங்கள் நகராட்சிக்கு வர இயலவில்லை என்றும், மத்திய அரசின் விலங்குகள் நல வாரியத்தில் புதிய விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டதாலும், மேற்படி பணியை மேற்கொள்வதில் சுணக்கம் ஏற்பட்டதாகவும், தற்போது மத்திய அரசின் விலங்குகள் நல வாரியத்தில் மேற்படி நிறுவனத்திற்கு 25.04.2023ல் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். மேலும் தற்பொழுது வெளியிடப்பட்டுள்ள புதிய அரசாணை (4D) எண்.01 நாள்:17.03.2023 கால்நடை பராமரிப்பு, பால்பண்ணை, மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (AH3) துறையின் அரசாணையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் அறுவை சிகிச்சைக்கான திருத்தி அமைக்கப்பட்ட கட்டணம் ரூ.1650/- (நாய் பிடிப்பதற்கான கட்டணம் ரூ.200 மற்றும் அறுவை சிகிச்சை, ஊசி மருந்துகள், உணவு உள்ளிட்ட செலவிற்கான கட்டணம் ரூ.1450) நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த கட்டணத்தில் மேற்படி நிறுவனத்திற்கு புதிய பணி உத்தரவு வழங்கும் பட்சத்தில் அவர்களது நிறுவனத்தின் மருத்துவக்குழு மற்றும் நாய் பிடிக்கும் குழுவினர்கள் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

ஆகவே தெரு நாய்கள் தொல்லைகள் குறித்தான பொது மக்களின் புகார்கள் மற்றும் தினசரி நாளிதழில் வெளியாகியுள்ள புகார் செய்திகளின் தீவிரத்தன்மையை கருத்தில் கொண்டும், விருதுநகர் மாவட்ட நிர்வாகத்தின் அறிவுறுத்தலின் பேரிலும் இந்நகராட்சி பகுதிகளில் தெரு நாய் கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்கு புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட கட்டணத்தில் மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கும் ஏற்கனவே வழங்கப்பட்ட உத்தரவினை ரத்து செய்வதற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தெரு நாய் தொல்லைகள் குறித்தான பொது மக்களின் புகார்கள் மற்றும் தினசரி நாளிதழில் வெளியாகியுள்ள புகார் செய்திகளின் தீவிரத்தன்மையை கருத்தில் கொண்டு மேற்படி நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்ட பணி உத்தரவின்படி, புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட கட்டணத்தில் பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. மாவட்ட நிர்வாகத்தின் அறிவுரையின்படி, தெரு நாய் தொல்லைகளின் அபாயத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட கட்டணத்தில் பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.340/2022/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.319, நாள்: 31.07.2023**
**தீர்மானம்: அலுவலக குறிப்பிற்கு மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**